

மதுரையில் நேற்று, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலை யில், திருப்பரங்குன்றம் தொகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. நிர்வாகிகள் பத்துக்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவ்வாறு கழகத்தில் இணைந்தவர்களில், அ.தி.மு.க. திருப்பரங்குன்றம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் M.ரமேஷ், திருப்பரங்குன்றம் நிலையூர் ஒன்றியச் செயலாளர் நிலையூர் முருகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர் வழக்கறிஞர் R. சேதுராமன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் வழக்கறிஞர் M. ஜெய பிரசன்னா, திருப்பரங்குன்றம் விவசாயப் பிரிவுச் செயலாளர் P.பாண்டி, மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர் கவிஞர் P.மோகன்தாஸ் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். மாவட்டச் செயலாளர்கள் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் தனது பிறந்தநாளில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

கொள்கையில் உறுதியையும் - களப்பணியையும் - அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக்காட்டியவர் சோ.மா.இராமச்சந்திரன்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, நவ.1-

அண்ணாநகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சோ.மா.இராமச்சந்திரன் (வயது 101) அவர்கள் நேற்று முன்தினம் இயற்கை யெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்து கிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

அச்செய்தியில் கழகத் தலைவர் அவர்கள், கொள்கையில் உறுதியையும், களப்பணியில் அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக் காட்டியவர் சோ.மா.இராமச்சந்திரன் அவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

நூறாண்டுகளைக் கடந்து வாழ்ந்த கழகத்தின் மூத்த முன்னோடியும், முன் னாள் சட்டமன்ற உறுப்பினருமான சோ.மா. இராமச்சந்திரன் அவர்கள் மறைவெய்திய செய்தி மிகுந்த துயரமளிக்கிறது.

எளிய தேநீர்க் கடை நடத்தி, தமது கடின உழைப்பால் உயர்ந்து, திராவிட இயக்கக்



கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்தவர். மிசா சிறைவாசம் கண்டவர். 30 ஆண்டுகள் பகுதிச் செயலாளராகவும், ஒரு முறை அண்ணா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர். கொள்கையில் உறுதியையும் களப்பணியில் அர்ப்பணிப்பையும் தமது நூற்றாண்டு வாழ்வால் எடுத்துக்காட்டிய வர். அவரது நெடிய கழகப் பணியைப் போற் றும் வகையில், கடந்த ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் அவருக்குக் கலைஞர் விருது வழங்கிச் சிறப்பித்தோம்.

கடந்த ஆண்டு அவரது இல்லத்திற்கே நேரில் சென்று, நூறாவது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தபோது அவர் காட் டிய அன்பும் மகிழ்ச்சியும் இன்றும் என் நெஞ் சில் நிறைந்திருக்கின்றன.

கழகத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த அவரது நெடிய பொதுவாழ்வு இன்று நிறைவுற்றிருக்கிறது. அவர் விட்டுச் சென்ற கொள்கைத் தடமும் தொண்டறமும் என்றும் நமக்கு வழிகாட்டும்!

சோ.மா.இராமச்சந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உற வினர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவ ருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறு தலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி யில் குறிப்பிட்டுள்ளார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; காங்கிரஸ் கூட்டணி இல்லேண்ணா தி.மு.க. இவ்வளவு இடங்களில் வெற்றி பெற்றிருக்காதுன்னும், தமிழ்நாட்டில் இப்போதுதான் காமராஜர் ஆட்சி நடக்குதுன்னும் மந்திரி விஸ்வநாதன் பேசி இருக்காரே பார்த்தியா!

பட்டணம் : **ஆமாமய்யா; நன்றி கெட்ட ஜென்மத்துக்கு எடுத்துக்காட்டு அவங்கெல்லாம். காமராஜர் ஆட்சியிலே இப்படியா தினம் தினம் கொலை, கொள்ளை, கற்பழிப்பெல்லாம் நடந்தது. பெருந்தலைவர் காமராஜரை இப்படியா அசிங்கப்படுத்தறது. என்ன பண்றது. பதவி படுத்தும் பாடு; அப்படி பேசச் சொல்லுது.**

கோவை மாநகரில் மழையால் பாதிக்கப்பட்ட செல்வ சிந்தாமணி குளம்!

வி.செந்தில் பாலாஜி நேரில் ஆய்வு!

கோவை. நவ.1-

கோவையில் கடந்த 25ம்தேதி பெய்த கனம ழையின் காரணமாக கோட்டைமேடு ஈஸ்வரன் கோவில், டவுன்ஹால் வின்சென்ட் சாலை, செல் வபுரம், கெம்பட்டி காலனி பகுதிகள் கடுமை யாக பாதிக்கப்பட்டது. செல்வ சிந்தாமணி குளத் தில் இருந்து வெளியேறிய தண்ணீர் குடியிருப்பு பகு திகளில் புகுந்தது. இந்நி லையில், வெள்ளத்தால் பாதிக்க ப்பட்ட பகுதிக ளையும், செல்வ சிந்தாமணி குளத்தையும் கோவை தெற்கு சட்ட மன்ற உறுப்பினர், கழக மேற்கு மண்டல பொறுப் பாளர் வி.செந்தில் பாலாஜி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளம் புகுந்தது தொடர்பாக எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடத் தில் கேட்டறிந்தார். பின் னர், கோட்டைமேடு வின் சென்ட் ரோட்டில் மழையால் பாதிக்கப் பட்ட குடியிருப்பு பகுதி களை நேரில் பார்வை யிட்ட ஆய்வு செய்தார்.

அப்போது அவரிடம் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். குறிப்பாக, அந்த பகுதியில் உள்ள கழி வறையை அகற்ற வேண் டும். மழையின்போது தண்ணீர்குடியிருப்புகளில் நுழையாத வகையில் நட வ டிக்கை எடுக்க வேண்டும். மரக்கிளை களை வெட்ட வேண்டும் எனக்கூறினர். இதுதொ டர்பாக, சம்பந் தப்பட்ட துறை அதிகாரிகள் வாயி லாக உரிய நடவ டிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

இந்த ஆய்வின்போது கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந் தமிழ் செல்வன், கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முரு கேசன், கோவை வடக்கு மாவட்ட கழக செயலா ளர் தொண்டா முத்தூர் அ.ரவி, நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாநகராட்சி மேயர் கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற் றிச்செல்வன், மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மாந கராட்சி சுகாதார குழு தலைவர் பெ. மாரிச்செல் வன், பகுதி கழக செயலா ளர்கள், பொறுப்பாளர் கள் மார்க்கெட் மனோகரன், கேபிள் மணி, பத்துதீன், பொதுக் கு ழு உறுப் பினர் மு.மா.ச.முருகன், மாநக ராட்சி பணிகள் குழுத் தலைவர் சாந்தி முருகன், நிதிக்குழுத் தலைவர் முப சீரா, உக்கடம் ஆனந்த் உள்பட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர் வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பா ளர்கள், துணை அமைப்பா ளர்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதி கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்: காவேரிபட்டணத்தில் கண் சிகிச்சை முகாம்!

மாவட்ட செயலாளர் தே.மதியழகன் தொடங்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, நவ. 1-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட் டணத்தில் நடைபெற்ற மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமை கிருஷ் ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரு மான மதியழகன் தொடங்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட் டம் காவேரிப்பட்டினத் தில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி துணைக் கிளை, சேலம் அரவிந்த் கண் மருத்துவ மனைமற்றும்கிருஷ்ணகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் மற்றும் கேபிள் சின்னசாமி ஆகி யோர் செய்திருந்தனர்.

இந்த முகாமிற்கு கிருஷ் ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், முன் னாள் எம்.எல்.ஏவுமான மதியழகன் தலைமை தாங்கி, குத்துவிளக்கேற்றி முகாமைத் தொடங்கி வைத்தார்.

பொதுமக்களுக்கு இல வசமாக கண் பரிசோ தனை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் கிடைக் கும் வகையில் இம்முகாம் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது. இதில் கண் தொடர்பான பாதிப்புக ளைக் கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டது டன், கண் பார்வையைப் பாதுகாப்பதன் அவசியம் மற்றும் கண் நோய்களுக்கு உரிய நேரத்தில் மருத்து வப் பரிசோதனை மேற் கொள்வதன் முக்கியத்து வம் குறித்து பொதுமக்க ளுக்கு விழிப்புணர்வு ஏற்ப டுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன், ஒன்றியச் செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, சரவணன், பேரூர் கழக செயலாளர் பாபு, பொதுக்குழு உறுப் பினர் நாகராஜ், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் செந்தில்கு மார், முன்னாள் நகரச் செயலாளர் சாஜித் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

மேலும், கண் மருத்து வர் அரினா ஜான், இந்தி யன் ரெட் கிராஸ் சொசைட்டியின் மாவட் டச் செயலாளர் செந்தில்கு மார், காவேரிப்பட்டினம் கிளைச் செயலாளர் சண் முகம் மற்றும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலை வர்கள் செந்தாமரை, தமி ழரசு, சக்திவேல், மாவட்ட வர்த்தக அணி நிர்வாகி மணி விஜயன், சேஷகிரி, அபி, கவி கோவிந்தராஜ், பாரதிராஜா, மேஸ்திரி சின்ராஜ் உள்ளிட்ட மருத் துவக் குழுவினர், திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பொதுமக்களின் நலன் கருதி நடத்தப்பட்ட இந்த சமூக நலப் பணியின் மூலம் ஏராளமானோர் பயனடைந்தனர்.



புதுக்கோட்டை வடக்கு,தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சர், எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே. கே. செல்லப்பாண்டியன் முன்னிலையிலும் மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ்ச் செல்வன் அவைக்கூடத்தில் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் எம். தேவி, பாத்திமா பீவி, தவசு மணி, அ.பிரபா, உதயம் சண்முகம், சுப. சரவணன், அ.சுப்பிரமணியன், ஞான. இளங்கோவன், பி. ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி வே.ராஜேஸ். பொன்.கணேசன், வி.ஆர்.இளையராஜா மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொருளாளர் எம்.லியாகத் அலி தலை மையில் புதுக்கோட்டை நகர்மன்ற கட் டிடத்தில் நடைபெற்ற மேனாள் 17வது வார்டு வட்ட கழக செயலாளர், மேனாள் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சர்தார் வி.விஜ யகுமார் படத்திறப்பு விழாவினை தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கே. கே.செல்லபாண்டியன் ஆகியோர் திறந்துவைத்தார்கள். நிகழ்வில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர்.கவி தைப் பித்தன், அரு.வீரமணி, சுப.சரவ ணன் கீரை.தமிழ்ராஜா, வே.ராஜேஷ், என்.சாத்தையா, அ.ரெத்தினம், மணி வேலன் மற்றும் மாமன்ற உறுப்பினர் கள் வட்ட கழக செயலாளர்கள் அணிக ளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உடன் பிறப்புகள் மற்றும் விஜயகுமார் குடும் பத்தினர் உள்ளனர்.